World Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *II* தீமோத்தேயு

**ஆசிரியர்:** பவுல் தர்சு பட்டணத்தான், யூத குல பெற்றோருக்கு பிறந்தவர். இவர் ரோம குடிமகன் மற்றும் கிரேக்க மொழியை நன்கு பேசக்கொடியவர். கூடாரம் செய்பவர்.

எழுதப்பட்ட வருடம்:

| நிருபத்தின் பெயர் | எழுதிய வருடம் |
|---|---|
| *1* தெசலோனிக்கேயர் | *52* கி.பி. |
| *2* தெசலோனிக்கேயர் | *52* கி.பி. |
| *1* கொரிந்தியர் | *57* கி.பி. |
| *2* கொரிந்தியர் | *57* கி.பி. |
| கலாத்தியர் | *55-57 AD* |
| ரோமர் | *57* கி.பி. |
| எபேசியர் | *62* கி.பி. |
| பிலிப்பியர் | *62* கி.பி. |
| கொலோசெயர் | *52* கி.பி. |
| பிலேமோன் | *63* கி.பி. |
| எபிரேயர் | *64-65* கி.பி. |
| தீத்து | *64-65* கி.பி. |
| *1*தீமோத்தேயு | *64-65* கி.பி. |
| *2* தீமோத்தேயு | *66-67* கி.பி. |

*அப்போஸ்தலனாகிய பவுல், போதக ஊழியத்தை குறித்து மூன்று கடிதங்கள் ரோம சிறையில் மரிக்கும் முன் எழுதினார். அவை I தீமோத்தேயு, II தீமோத்தேயு மற்றும் தீத்து-வுக்கு எழுதின கடிதங்கள். சிலர் இக்கடிதத்தை எழுதியது யார் என்று கேள்வி எழுப்புவர் ஆயினும், இத்தெய் எழுதியது அப்போஸ்தலனாகிய பவுல் தான் என்பது மிகவும் தெளிவாக தெரிகிறது.*

## ***எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்:***

*வரலாற்று ஆய்வாளர்களின்படி, பவுல் கிபி 68-ல் நீரோ மன்னனால் கொலை செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரிக்கிறார். இக்காலகட்டத்தின் தொடக்கத்தில் (கிபி 62 – 64-ல்) பவுலால் இந்த கடிதங்கள் எழுதப்பட்டிருக்கலாம். தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் கி.பி. 67லில் வெட்ப காலத்தில் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலை கிடங்கிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.*

## ***பின்னணி:***

*இவ்விரண்டு கடிதங்களும் பவுலின் ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவுக்கு அவரின் பெயரை குறிப்பிட்டு எழுதப்பட்டவை.*

*தீமோத்தேயு கலாத்திய நாட்டிலுள்ள ரோம குடியிருப்புகளில் ஒன்றான லீஸ்திரா என்னும் இடத்தை சேர்ந்தவர். இவருடைய தந்தை யூதரல்லாதவர் தாய் ஒரு யூத ஸ்திரீ.*

***அப்போஸ்தலர் 16:1-3***

*அப்போஸ்தலனாகிய பவுல் இவரை தனது பயணத்தில் இணைத்துக்கொண்டார். இவருடைய தாயும், பாட்டியும் ஆண்டவரில் உறுதியான விசுவாசிகள். ஆதலால் தீமோத்தேயு சிறு வயதிலிருந்தே விசுவாசத்தில் வளர்க்கப்பட்டார் (II தீமோத்தேயு 1:5 & 3:14-15).*

*பவுலும் சபையின் மூப்பரும் தீமோத்தேயுவின் தலையில் கை வைத்து ஜெபித்து அவரை சுவிசேஷ (மிஷனரி) ஊழியத்திற்கு அனுப்பிவைத்தார்கள் (I தீமோத்தேயு 1:18 & 4:14).*

*அப்போஸ்தலர் 17:14-15; 18:5; 19:22 & 20:4-6 வசனங்களிலிருந்து தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் சுவிசேஷ பிரயாணத்தில் துணையாக இருந்தார் என்பது தெரிகிறது.*

*பவுல் தன்னை தீமோத்தேயுவுக்கு தகப்பன் என்றே அறிவிக்கிறார் (பிலிப்பியர் 2:22).*

*தீமோத்தேயு பவுலின் மகன் (I தீமோத்தேயு 1:2, 18; I கொரிந்தியர் 4:17; II தீமோத்தேயு 1:2; 2:1)*

*தீமோத்தேயு பவுல் ஸ்தாபித்த பல சபைகளில் பணி புரிந்தவர்.*

*தெசலோனிக்கேயர் – I தெசலோனிக்கேயர் 3:2;6*

*கொரிந்து – I கொரிந்தியர் 4:17; 16:10*

*பிலிப்பாயு – பிலிப்பியர் 2:19 &23*

*எபேசு – I தீமோத்தேயு 1:3*

*தீமோத்தேயுவை குறித்த வேறு உறுதி செய்யப்படாத குறிப்புகள் கூறுவதாவது – 97 ஆம் ஆண்டு தீனாளுக்கு ஏறேடுக்கப்பட்ட ஊர்வலத்தை மறித்து 80 வயது நிரம்பிய சபையின் பிஷப் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். அதை கேட்ட பாகாலின் மக்கள், அவரை தெருவிலே இழுத்து கல்லால் அடித்து கொலை செய்தார்கள்.*

## நோக்கம்:

*பவுல் எபேசுவிலே சபையை தனது மூன்றாம் மிஷனரி பயணத்தின் ஆரம்ப நாட்களில் நிறுவி அங்கு சுமார் மூன்று வருடங்கள் தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 19; 20:31).*

*தன்னுடைய முதல் கடிதமாகிய தீமோத்தேயுவுக்கு எழுதின முதாலாம் நிருபத்தில், சபையிலிருந்து வெளியே வரும் தவறான போதனைகளை குறித்து எவ்வாறு கையாளுவது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார்.*

*சில மாதங்களுக்கு பிறகு பவுல் தன்னுடைய நேரம் வந்ததென்றும், தான் இந்த முறை நிலவறையில் சிறைப்படுத்தப்பட்டோம் என்பதை அறிந்தார். அதனால் கடைசியாக ஒருமுறை தன் ஆவிக்குரிய மகனை காண வேண்டும் என்று ஏங்கினார். ஆகவே, அதி சீக்கிரமாக தன்னை வந்து சந்திக்குமாறு தீமோத்தேயுவுக்கு அவர் எழுதிய இந்த கடித்தத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.*

*மற்றும் 2 தீமோத்தேயு நிருபம், தீமோத்தேயுவுக்கு அவர் எழுதின தனிப்பட்ட கடிதம். அதில் தீமோத்தேயு, இயேசு கிறிஸ்துவையும் பவுலையும் முன்மாதிரியாக வைத்தும் மற்றும் எவ்வாறு விசுவாசத்தில் வாழ வேண்டும் என்று எழுதியிருந்தார்.*

*தீமோத்தேயுவுக்கு எழுதின அவருடைய முதல் நிருபத்தில், சபையின் முக்கிய நோக்கம் சுவிசேஷத்தின் சத்தியத்தை உலகிற்கு பிரகடனப்படுத்தவும் மற்றும் முன் மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து தேவனுடைய வார்த்தையை போதிப்பதே தலைவர்களின் பொறுப்பு என்கிறார்.*

*இந்த இரண்டு நிருபங்களின் இடைப்பட்ட காலத்தில் சபையின் நிலைமை மிகவும் சீரழிந்தது மட்டுமல்லாமல் தலைவர்கள் தேவனில்லை (நாத்திகவாதிகளாக) என்ற நிலைமைக்கு பெருகி கொண்டு வருகிறார்கள் மற்றும் உலகத்துக்குரியவர்களாய் கடைசிகால ஊழியர்களாக மாறிவிட்டனர்.*

*ஒரு சபை தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற தவறினால் பிறகு தேவனுடைய சத்தியம் இந்த உலகத்துக்குள் பரவுவது நின்றுவிடும். சபையில் தலைவர்கள் தேவனுடைய வார்த்தையின் முழு உண்மையை போதிக்க தவறினால் அந்த சபையே தோல்வியுற்றதாகிவிடும்.*

***தேவனுடைய ஈவும் இரக்கமுமே ஒரு கிறிஸ்தவ ஊழியக்காரனின் அடிப்படை முக்கியமான ஆதாரம் என்று தீமோத்தேயுவுக்கு பவுல் இந்த கடித்தத்தில் எழுதியிருக்கிறார்.***

*இந்த கடித்தத்தில் பவுல் தன்னை ஒரு பிரசங்கியார் என்றும், அப்போஸ்தலர் என்றும் ஆசிரியர் என்றும் அழைக்கிறார். (2* ***தீமோத்தேயு*** *1:11)*

*சுவிசேஷத்திற்காக பாடுகள் அனுபவிப்பதிலும், விசுவாசத்தில் உண்மையாய் இருப்பதிலும்,*

*கிருபையிலும் விசுவாசத்திலும் உறுதியாய் இருப்பதிலும் முன்னுதாரணமாக பவுல் தன்னையும் கிரிஸ்துவையுமே காண்பிக்கிறார்.*

*ஆகையால் மூன்று முறை இந்த கடிதத்தில் நீ தீங்கநுபவி என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.*

***2 தீமோத்தேயு** 1:8; 2:3 & 4:5*

*அது மாத்திரமல்லமால் எவர் ஒருவர் கிறிஸ்துவை பின்பற்றி நடக்க மனதாயிருந்தால் துன்படவேண்டிருக்கும் என்று உறுதிப்படுத்துகிறார்.*

***2 தீமோத்தேயு** 3:12,* *அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.*

**சுருக்க வரைவுரை:**

***அதிகாரம் 1***

- *வாழ்த்துதல் **1:1-2***
- *தீமோத்தேயுவின் விசுவாசம் மற்றும் பாரம்பரியம் **1:3-7***
- *சுவிசேஷத்தை குறித்து வெட்கப்பட வேண்டாம் **1:8-23***
- *உங்கள் விசுவாசத்தில் உண்மையாயிருங்கள் **1:13-18***

***அதிகாரம் 2***

- *பாடுகளிலும் இரக்கத்திலும் திடமனதாயிருங்கள்* ***2:1-13***

- *தவறான போதனைகளை எவ்வாறு கையாளுவது* ***2:14-26***

***அதிகாரம் 3***

- *கடைசி நாட்களில் துன்மார்க்கர்கள்* ***3:1-9***

- *தேவனுடைய வார்த்தையில் உறுதியாய் தரித்திருங்கள்* ***3:9-17***

***அதிகாரம் 4***

- *சுவிசேஷத்தை பிரசங்கித்து சத்தியத்தை பேசுங்கள்* ***4:1-5***

- *பவுல் மரிக்க தயார்* ***4:6-8***

- *தீமோத்தேயுவுக்கு தனிப்பட்ட வார்த்தைகள்* ***4:9-18***

- *முடிவு கருத்துகளும் மற்றும் வாழ்த்துதல்* ***4:19-22***

## இன்றைய பயன்பாடு:

### 1. கர்த்தருடைய சத்தியத்தை காக்கும்போது, கர்த்தர் உங்கள் வாழ்வை காக்கின்றார்.

*2 தீமோத்தேயு 1:12 & 14,*

*[12] அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். [13] நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு.*

தம்முடைய வார்த்தையை காக்கிரவர்களுடைய வாழ்வை, அவர் காக்கிறார். ஆகையால், கர்த்தருடைய சித்தைத்தை செய்வதை பார்க்கிலும் பாதுகாப்பான காரியம் வேறு எதுவும் இல்லை.

2. **நமக்கு கொடுக்கப்பட்ட வேத வாக்கியங்கள் நாம் விசுவாசிக்கும்படியாகவும், அதை பிறருக்கு அறிவிக்கவேண்டிய கடமையுடனும் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன.**

*2* **தீமோத்தேயு** *2:2, அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.*

என்றும் தவறாத கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதும், நமக்குப்பின் அதை பிறருக்கு அறிவிக்கும்படி நம்பிக்கையான ஒருவரை கண்டுபிடித்து அவரிடம் பிரசங்கிப்பதும் நமது கடமையாகும். கர்த்தருடைய வார்த்தை ஒருவருடைய வாழ்வின் நோக்கத்தை சதாகாலங்களுக்கும் மாற்றிவிடும்; ஆகவே, அவருடைய வார்த்தையை நாம் அறிவிப்பது நமது கடமையல்லவா?

தான் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு நெருக்கப்படுவதாக பவுல் கொரிந்து சபைக்கு தெரிவிக்கிறார்.

*1* **கொரிந்தியர்** *9:16, சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.*

## *3.* - முழு மனதோடு ஊழியம் செய்யுங்கள்- *Be whole hearted*

***2 தீமோத்தேயு 2:15***, *நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.*

கர்த்தருடைய அங்கீகாரம் பெறவேண்டுமானால் நேர்மையாகவும், கடுமையாகவும். அரை மனதோடு அல்ல முழு உள்ளத்தோடும் உழைக்க வேண்டும். ஆனால் இந்த நவீன காலத்தில் நாம் அனைவரும் குறைந்த அளவு காரியங்களை செய்துவிட்டு தப்பவே ஆசைப்படுகிறோம்.

மேலும், ஜனங்கள் தங்கள் முதலாளிகள் பார்க்கும்போது மட்டுமே வேலை செய்வர். பிள்ளைகள் தங்கள் பெற்றோர் மேற்பார்வையிடும்போது மட்டுமே படிப்பார்கள். ஒரு கேமரா இருக்கும்போது மட்டுமே சாலை விதிகளை பின்பற்றுவார்கள்.

நீங்களும் பிறர் பார்க்கும்போது மாத்திரம் கிறிஸ்தவர்களாக வாழுகிறீர்களா? அல்லது கர்த்தருக்கு முழு உள்ளத்தோடு ஒப்புக்கொடுத்துள்ளீர்களா?

## *4.* - கடினமாக உழைக்க வேண்டும் - *Work Hard*

***2 தீமோத்தேயு 2:4-6***, [4] *தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்.* [5] *மேலும்*

*ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்.* [6] *பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்.*

மூன்று உதாரணங்கள்,

- போர் வீரர்
  - *Commitment* – அர்ப்பணிப்பு/ கடமை / ஒப்புக்கொடுத்தல்
- விளையாட்டு வீரர்
  - *Hard work* - கடுமையாக உழைத்து பயிற்சி எடுத்தல்
- விவசாயி
  - *Pateice* - பொறுமை

கிறிஸ்தவர்கள், கர்த்தர் செய்ய விரும்பும் காரியங்களை போர்வீரர்களைப்போல கடுமையாக உழைத்து நடப்பிக்க வேண்டும். இதை நடப்பிக்க தடையாக இருக்கும் எந்த காரியத்திலும் அவர்கள் ஈடுபடக்கூடாது. அவர்களுடைய வாழ்வின் முதன்மையான நோக்கம் தங்கள் ஆராதிக்கும் கர்த்தரை பிரியப்படுத்துவதே.

பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள், தாங்கள் பத்து மாதங்களாக கடுமையான பயிற்சி எடுத்துக்கொண்டதாக ஜீயஸ்-ன் *(Zeus)* சிலைக்கு முன்பாக உறுதிமொழி அளிக்க வேண்டும். கிறிஸ்த்தவ வாழ்க்கை ஒரு பந்தயத்தை போன்றது, விசுவாசமுள்ளவர்கள் அனைவரும் கடுமையான பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். கர்த்தரின் ஒழுக்கத்தை அவர் மீண்டும் வரும்வரை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த பந்தயத்தில், உலகத்தின் பந்தயங்களைபோல ஒருவர்

*மாத்திரமே பதக்கம் வெல்ல முடியும் என்பது இல்லை மாறாக, தம் மீது அன்பு கொண்டு தங்கள் வாழ்க்கை முழுவதும் விசுவாசித்த ஒவ்வொருவருக்கும் ஜீவகிரீடத்தை ஆண்டவர் வாக்களித்திருக்கிறார்.*

*கிறிஸ்த்தவர்கள், விவசாயிகளைபோல கடுமையாக உழைத்து கர்த்தர் செய்ய விரும்புவதை செய்ய வேண்டும். அந்த நற்காரியங்களின் பலன் கனிகள் / அறுவடை. கர்த்தர் அவருக்காக உண்மையாய் உழைத்தவர்களை ஆசீர்வதிப்பார். அவர்களுக்கு சதாகாலங்களுக்கும் நிலைக்கும் ஈவை அளிப்பார்.*

## *5.* வேத வசனத்தை அறிந்து கற்றுக்கொடுக்க வேண்டும் - *Know and teach the scriptures*

*கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் எந்த தலைவருக்கும் முக்கியமான இரண்டு பணிகள் உள்ளன:*

*i.* *வேத வசனங்களை அறிந்துகொள்ள வேண்டும்*
*ii.* *அவற்றை கற்றுக்கொடுக்க வேண்டும்*

*கர்த்தருடைய ஆலோசனையை குறித்த முழுமையான ஞானம் இருப்பது அவசியம். ஏனெனில், கர்த்தர் தமது வார்த்தையைக்கொண்டே தமது மக்களை உருவாக்குகிறார். இது போதகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல நம் ஒவ்வொருவருக்கும் கூட.*

*2 **தீமோத்தேயு** 3:14-16,* [14] *நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,* [15] *கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.*
[16] *வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,*

## 6. சுவிசேஷத்தை அறிவிக்க தயாராக இருங்கள், எப்பொழுதும்! - *Be ready to share, Always!*

*2 **தீமோத்தேயு** 4:2, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.*

எந்த நேரத்திலும் எந்த இடத்திலும், கர்த்தருடைய வார்த்தையை கூறுவதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை யார் முன்னிலையிலும் தற்காக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக – ஒரு நீதிமன்ற வழக்கு நடைபெறுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அவ்வழக்கில் மருத்துவர் ஒருவர் விபத்தில் சிக்கிய நபருக்கு சிகிச்சை அளிக்க மறுத்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். அந்த மருத்துவர் அந்த நோயாளிக்கு சிகிச்சை அளித்திருப்பாரேயானால் அந்த நோயாளி பிழைத்திருப்பார்.

இப்பொழுது கர்த்தர் நம்மை நம்பி ஒப்படைத்த பணியை நினைத்து பார்ப்போம்? நரகத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிற மனிதர்களை நித்தியத்திற்கும் மாற்ற வல்லதாக சுவிசேஷம் இருக்கிறது.

ஆகவே நாம் தயாராக இருக்க வேண்டும்!! எப்பொழுதும்!!

## *7. உங்கள் அழைப்பை நிறைவேற்றுங்கள் - Fulfil your ministry*

*2 **தீமோத்தேயு** 4:5, நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.*

சுவிசேஷத்தை அறிவிக்க பெறப்பட்ட அழைப்பை தீமோத்தேயு நிறைவேற்றும்படியாக பவுல் மிகுந்த பாரத்தோடு தீமோத்தேயுவுக்கு அழைப்பு விடுக்கிறார்.

*London*-ல் உள்ள *Westminster Chapel*-ல் பணியாற்றிய *Dr. Martin Lloyd-Jones* என்ற ஒரு மகத்தான பிரசங்கியாரின் வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

*ஏப்ரல் 28, 1929அன்று அவர் பிரசங்கித்தவைகளிளிருந்து எடுக்கப்பட்ட குறிப்பு:*

*"இந்த மேடைளிருந்து பொதுவாக தனிப்பட்ட ஒருவரை குறித்து பேசுவதில்லை அனால் இந்த காலை வேளையிலே ஒரு இந்த தலைப்பிற்கு உட்பட்ட ஒரு அனுபவத்தை பகிர்ந்துகொள்ள வாஞ்சிக்கிறேன் [அன்று அவர் மத் 22:20-21 'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்' – என்ற வசனத்தை குறித்து பிரசங்கித்துக்-கொண்டிருந்தார்]. நான் இங்கு [சபையின் போதகராக] வந்தபோது ஜனங்கள் என்னிடத்தில் 'ஏன் நீங்கள் மருத்துவர் என்ற ஒரு நல்ல வேலையை – நல்ல பணியை விட்டு இங்கு வந்தீர்கள்? அதை ஏன் துறந்தீர்கள்? ஒருவேளை நீங்கள் ஒரு பந்தய கணக்கராக இருந்து அதை துறந்து சுவிசேஷத்தை அறிவிக்க வந்திருப்பீர்களேயானால், சிறந்த காரியத்தை செய்கிறீர்கள் என்று அதை எங்களால் ஏற்றுகொள்ள முடிந்திருக்கும். ஆனால் மருத்துவம் – பிணியாளிகளை சுகமாக்குதலும், வேதனையிலிருந்து விடுவிக்கும் ஒரு நல்ல பணி!'. ஒருவர் இவ்விதமாகவே கூறினார் 'நீங்கள் ஒரு வழக்கறிங்கராக இருந்து அதை துறந்திருப்பீர்களேயானால் உங்களை தட்டிக்கொடுத்திருப்பேன், அனால் மருத்துவத்தை எப்படி துறந்தீர்கள்!'.*

*அவர்களிடம் நான் கூற நினைத்த காரியம், 'நீங்கள் மருத்துவ பணியைப்பற்றி அதிகம் தெரிந்திருந்தால் இதை புரிந்து கொண்டிருப்பீர்கள். நாங்கள் முழு நேரத்தையும் செலவழித்து ஒரு மனிதனை குணப்படுத்தி அவர்களுடைய பாவமான வாழ்க்கைக்கு அவர்களை திருப்பி அனுப்புகிறோம்'. நான் நோயாளிகளை*

*படுக்கையிலே சந்தித்திருக்கிறேன். அவர்களுடைய அழிவற்ற ஆத்துமாவை குறித்து அவர்களிடத்தில் பேசியிருக்கிறேன். அவர்கள் படுக்கையிலே பல நல்ல காரியங்களை செய்வோம் என்று உறுதி அளித்தனர்.*

*ஆனால் அவர்கள் குணமடைந்த பின்னர் தங்கள் பழைய பாவ வாழ்க்கைக்கு திரும்பினர்! இந்த மனிதர்கள் பாவம் செய்வதற்கு நான் உதவுகிறேன் என்பதை நான் உணர்ந்தேன், இதை இனிமேலும் தொடரக்கூடாது என்று முடிவெடுத்தேன். நான் ஆத்துமாக்களை குணமாகவே விரும்புகிறேன்.*

*ஒருவன் நோய்வாய்பட்ட உடலோடு இருந்தும் அவன் ஆத்துமா சரியானதாக இருந்தால், அவன் இறுதி வரை காப்பற்றப்படுவான். ஆனால் ஒருவன் திடகாத்திரமான உடலோடு இருந்தாலும் ஆத்துமாவில் வியதிப்பட்டவனானால், அறுபது வயது வரை நலமாக இருந்தாலும் பிறகு நித்தியத்திற்கும் நரகத்தை அவன் சந்திக்க வேண்டியிருக்கும். ஆம்! நம்மிடம் உள்ள இப்படிப்பட்ட காரியங்களை நாம் துறந்து எல்லாவற்றிலும் சிறந்த இரட்சிப்பின் மன மகிழ்ச்சியையும், புதிதாக்கப்பட்ட வாழ்வையும் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்"*

*என்னுடைய ஜெபமும் வேண்டுதலும் இதுவே -*
***உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுங்கள்!!***